# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 6/2021 தேதி- 16.07.2026

(P.W.1) . விஸ்வாசம்

**குறுக்கு விசாரணை**

எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணம் எங்கே உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் நான் சான்றிட்ட நகலைத்தான் தாக்கல் செய்துள்ளேன் அசல் ஆவணம் எங்கே என்றால் அசலைப்பார்த்துள்ளேன் நான் வெளிநாட்டில் இருந்ததால் அசல் ஆவணம் தற்போது எங்கே இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நான் வங்கியில் ஏதாவது கடன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா-ஆ.1 ஆவணம் ஏற்படுத்தும் முன்பே பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்திலும் அவரது சொத்திலும் கருங்கல் பஞ்சாயத்தின் அனுமதியோடு வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் அவருக்கு உரிமைப்பட்ட 6 சென்டில் வீடு கட்டி அனுபவித்து வந்தார் தற்போது அதை இடித்து பஞ்சாயத்து அனுமதி வாங்காமல் எனது சொத்திலும் சேர்த்து வீடு கட்டியுள்ளார்.

மொத்தம் 10.5 சென்டில் எனது அப்பா சொன்னதன் பெயரில் பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் பிரதிவாதிக்கு எனது அப்பா கொடுத்திருந்தால் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கமாட்டார். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் 10.5 சென்டில் பிரதிவாதி வீடுகட்டி அனுபவித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. 1988 ஆம் ஆண்டு பிரதிவாதி கருங்கல் பஞ்சாயத்திலிருந்து வீடுகட்ட அனுமதி வாங்கிய வரைபடத்திற்கு ஏதாவது எதிர்ப்பு தெரிவித்தேனா என்றால் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மேற்படி வரைபட அனுமதியை ரத்து செய்ய வேறு எந்த முயற்சியும் நான் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு 1990 ஆம் ஆண்டு வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்தார். 1988 ஆம்ஆண்டு பிரதிவாதி வீடுகட்டும்போது 10.5 சென்டை சுற்றி காம்போண்ட் சுவர் வைத்ததற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்றால் நான் வெளிநாட்டில் இருந்ததால் காம்போண்ட் சுவர் கட்டிய விவரம் எனக்கு தெரியாது.

நான் வெளிநாட்டிலிருந்து ஒரு ஆண்டிற்கு எத்தனைமுறை வந்து செல்வேன் என்றால் 4 வருடத்திற்கு ஒருமுறை வருவேன். 4 வருடத்திற்கு ஒருமுறை வரும்போது பிரதிவாதியின் வீட்டிற்கு செல்வேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் அருகிலிருக்கும் ரோடு வழியாகத்தான் எனது வீட்டிற்கு செல்வேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டிலிருந்து வரும்போது வழக்கு பட்டிகை சொத்தை பார்த்ததுண்டா என்றால் எனது அப்பா உயிருடன் இருந்தார் நான் வழக்கு பட்டிகை சொத்தை பார்க்கவில்லை. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 1996 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் இறந்தார். எனது அப்பா இறந்தபின்பு வழக்கு பட்டிகை சொத்தை சென்று பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான் அப்போது மதில் சுவர் இல்லை.

2020 ஆம் ஆண்டிற்கு பிறகு மதில் சுவர் கட்டப்பட்டது. மதில் சுவர் கட்டி 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம் மேற்படி மதில் சுவரின் வயதைக்குறிப்பிட சொல்லி கேட்டேனா என்றால் மதில் சுவர் எப்போது கட்டியது என்று நான் கேட்கவில்லை. நீதிமன்ற ஆணையருக்கு அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை ஏதாவது தெரிவித்திருக்கிறேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் 15 ஆண்டுகள் பழமையான மதில் சுவர் என குறிப்பிட்டுள்ளார் என்றால் 15 வருடம் பழக்கமான மதில் சுவர் தெற்கு பக்கமும் மேற்கு பக்கமும் உள்ளது. வடக்கு பக்கமும் கிழக்கு பக்கமும் 2020 ஆம் ஆண்டிற்கு பின்பு கட்டப்பட்டது. நான் வழக்கு பட்டிகை சொத்தில் மதில் சுவர் எதுவும் கட்டவில்லை என்றால் எனது காம்போண்ட் சுவரை நானே இடித்துவிட்டேன். காம்போண்ட் சுவர் நான் கட்டவில்லை.

வழக்கு பட்டிகை சொத்திற்கு தனியாக கேட் எதுவும் இல்லை என்றால் 2 கேட் உள்ளது. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்திற்கு வரும்போது 2 கேட் இருந்தது என்றால் நான் 2 கேட்டையும் இடித்துவிட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததை காண்பிக்க நீதிமன்றத்தில் அந்த புகாரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் அவசரமாக இடம் பார்வையிட வரும்போது கேட் இருந்தது அதன் பின்புதான் நான் காம்போண்ட் சுவரை இடித்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி

1988 ஆம் ஆண்டு கட்டிய வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் எனது சகோதரன் என்கிற முறையில் நான் பார்த்து பேசிக்கொள்வேன் வீட்டிற்கு சென்றது கிடையாது.

பிரதிவாதி வைத்த வீட்டில் அட்டாச் பாத்ரூம் கிடையாது. வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு அற்றத்தில்தான் பாத்ரூம் இருந்தது என்றால் பிரதிவாதியின் வீட்டின் தெற்கு பக்கம் தனியாக பாத்ரூம் மற்றும் மாட்டுத்தொழுவம் இருந்தது. நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு அற்றத்தில் பாத்ரூம் காங்கிரிட் மேற்கூரையுடன் இருப்பதை தெளிவாக காட்டியுள்ளார் மேலும் அது 20 வருட பழமையானது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாத்ரூம் நான் கட்டியது. மேற்படி பாத்ரூமை நான் கட்டியதாக எனது வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ நீதிமன்ற ஆணையரிடமோ அதைக் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 1988 ஆம் ஆண்டு பிரதிவாதி அவரது வீட்டைக் கட்டும்போது மேற்படி பாத்ரூமை கட்டினார் வழக்கிற்காக நான் கட்டியதாக கூறுகிறேன் என்றால் பிரதிவாதி அவரது வீட்டிற்கு தெற்கு பக்கம்தான் பாத்ரூம் கட்டியிருந்தார். மேற்கு பக்கமிருக்கும் பாத்ரூமை பிரதிவாதி கட்டவில்லை. நான் கூறுவதுபோல் எந்த பாத்ரூமும் கிடையாது பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது சொத்தின் மேற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் சுரேஷின் சொத்து உள்ளது. தெற்கு பக்கம் எனது மூத்த சகோதரரான கார்லோசின் சொத்து உள்ளது. மேற்கு பக்கமிருக்கும் சொத்திற்கும் எனது சொத்திற்கும் எத்தனை அடி உயரம் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கு பக்கம் இருக்கும் சொத்தும் எனது சொத்தும் சமமான உள்ளதா என்றால் முதலில் தாழ்ந்து இருந்தது தற்போது மண்ணை நிரப்பி சமமாக உள்ளது. மேற்கு பக்கமிருக்கும் காம்போண்ட் சுவர் கருங்கல்லால் கட்டி எழுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி காம்போண்ட் சுவர் 10 அடிக்கு கீழிருந்து கட்டி எழுப்பி பிரதிவாதி அதை மண்ணால் நிரப்பினார் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஆண்டு முதல் கரத்தீர்வை

செலுத்தினேன் என்றால் எனது பெயரில் தனியாக பிரித்ததற்கு பின்பு 2020 ஆம் ஆண்டு கட்டினேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**